முருகப்பெருமான் துணை

**மகான் உமாபதிசிவாச்சாரியார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**03.10.2022,** திங்கள்கிழமை

1. ஞானவழி காட்டும் அரங்கனே
ஞானிகள் பூசை செய்து
தானதரும பலமும் கூட்டி
தரணிகாக்க அவதாரம் புரிந்த அரங்கனே
2. அரங்கனே உன்பெருமை கூறி
அகிலமதில் சுபகிருது தரிவைதிங்கள்
வரங்களென மூவையோர் திகதி சோம வாரம்
(சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 16ம் நாள் 03.10.2022, திங்கள்கிழமை)
வழங்குவேன் அனுகூல ஆசி
3. ஆசிதனை உமாபதிசிவாச்சாரியார் யானும்
அருளுவேன் உலக நலம்பெற
வாசிவென்ற ஞானிகள் படை
வையகமெங்கிலும் வலம் வந்து
4. வந்துமே காத்து வருகவே
வடிவேலன் வழிபாடு தன்னை
சிந்தைவைத்து எங்கு மக்கள்
சிறப்பாக செய்து வருகின்றனரோ
5. வருகின்ற அங்கெல்லாம் ஆற்றல்
வரமாக வடிவேலன் ஆசியாக
பெருமைமிக்க ஞானபலமாக
பேரருளாக மக்களுக்கு துணைவரும்
6. வருகவே தீட்சை பலம்
வணங்கி மக்கள் ஏற்றுமே
முருகா என செபதபங்கள்
முழுமைபட செய்து வருக
7. வருவதுடன் அரங்கன் புகழை
வையகமெங்கிலும் பரப்பியே
தரும வேலியிட்டு வருதலுற
தரணியே நல்லபாதுகாப்பை பெறும்
8. காப்புதரும் ஞானி அரங்கன்
கலியில் தனி அவதாரம்
ஒப்புகொண்டு அரங்கன் ஆசிபட
ஓங்கார குடிலை வலம்வரும்
9. வருகின்ற அனைத்து மக்களுக்கும்
வரங்கள் மிகுதி கிட்டும்
தருகின்ற குணம் பெருகியே
தருமபலம் அனைவரும் அடைந்து

10. அடைந்துமே இந்த கலியில்
அளவிலா தரும சக்தியும்
தடையற அரங்கனால் பெருகி
தனித்துவம் மிகுந்த ஞானஆட்சி

11. ஆட்சியதும் தருமம் காக்கும்
ஆற்றல் மிக்க ஆட்சியாகும்
மாட்சிமைபட ஞானலோகமாகும்
மொழிந்திட்ட அனுகூல ஆசிமுற்றே

–சுபம்–